பங்கிளின்/ ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை 11-12 1992/ UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 15

## கொழும்பில் நேற்றுச் சம்பவம்

# மனித உரிமைகள் தினக் கூட்டத்தில் கண்ணீர்ப்புகை, குண்டாந் தடியடி!

## வாசுதேவ, மகிந்த கைதாகி விடுவிப்பு; பத்திரிகையாளர் உட்பட பலர் காயம்!

கொழும்பு, டிசம்பர் 11

கொழும்பில் நேற்று மனித உரிமைகள் தினக் கூட்டம் நடத்தியவர்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். குண்டாந்தடி அடியும் நடத்தினர்.

கூட்ட அமைப்பாளர்களும் எம். பிக்களுமான வாசுதேவ நாணயக்கார, மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரையும் பொலீஸார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு கோம்பவித்தெரு டி. மெல் பூங்காவில் அன்னையர் முன்னணியின் ஆதரவில் நேற்று ஐ. நா. மனித உரிமை தினம் கொண்டாடப்பட்டது. நாட்டில் நடந்த, நடக்கும் மனித உரிமை மீறல்களைக் கண்டிப்பதும் இக் கூட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

தமது கணவன் மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுப்பசொனிக் தாக்குதலில் நுணாவிலில் 2 பேர் பலி!

## 20 க்கும் மேற்பட்டோர் காயம்

தென்மராட்சி டிச. 11

ஸ்ரீலங்கா விமானப் படையின் இரு சுப்பசொனிக் விமானங்கள் நேற்றுக் காலை 8 10 மணியளவில், நுணாவில், மட்டுவில் தெற்குப் பகுதிகளில் கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தின.

இந்தச் சம்பவத்தில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் அந்த இடத்திலேயே மரணமானார்கள். இந்த இருவரில் ஒருவரான இளம் பெண் வயிறு பிளந்து குடல் வெளியேறிய நிலையில் பலியானார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இருபதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்களில் இருவர் மலரும் ஆபத்தில் இருந்தனர்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியிலும், சிலர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## அரசு அறிவிப்பு

லண்டன், டிச. 11

இலங்கை இனப்பிரச்சினைக்கு தெரிவுக்குழு மூலம் மட்டுமே தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அரசின் சார்பில் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்திருப்பதாக வந்த செய்திகள் தொடர்பாகப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

புலிகளின் அழைப்பை அவர் நிராகரித்தார் என்று ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அரசாங்கம் நேரடியா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடு மீது கடும் தாக்குதல்; திட்டங்கள் தயாராகுகின்றன!

லண்டன், டிச 11

யாழ். குடாநாட்டின் மீது பலத்த தாக்குதல்களை மற்றொரு நடத்தும் திட்டங்களை இராணுவம் தயாரித்து வருகிறது.

நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் இத் தகவலைத் தெரிவித்தார்.

"கொழும்பில் நடத்தத் திட்டமிட்டுள்ள தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நிறுத்தும் பட்சத்தில், இராணுவமும் யாழ் குடாநாட்டின் மீது எவ்வித தாக்குதலையும் நடத்தாது என இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளுக்கு உறுதி அளித்துள்ளனர்" — என்று வெளியான செய்திகள் தவறானவை என அந்த அதிகாரி சொன்னார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழ அகதிகளை இப்போதைக்கு கனடா திருப்பி அனுப்பமாட்டாது

யாழ்ப்பாணம், டிச. 11

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், அங்கு சுமுக நிலை தோன்றிய பின்னரே கனடாவில் தற்சமயம் வசித்து வரும் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்று கனடா அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ... ப் வேராஸிங்கர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

கனடாவில் உள்ள தமிழ் அகதிகளை அவர்களின் ... நாட்டிற்குத் திருப்பி ...

## சுப்பசொனிக் இரைச்சலால்

## குடாநாட்டில் நேற்று காலை பதற்றம் நிலவியது

யாழ்ப்பாணம், டிச. 11

சுப்பசொனிக் விமானங்கள் நேற்றுக் காலை தென்மராட்சி மட்டுமன்றி, குடாநாட்டின் ஏனைய பல பகுதிகளிலும் பதற்றத்தை ஏற்படுத்தின. யாழ். நகரப் பகுதி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நேற்றுக் காலை 8 20 மணியளவில் பரபரப்பு ஏற்பட்டது.

பெரும் இரைச்சலுடன் விமானங்கள் பறந்தபோது கன்னாதம். தெல்லிப்பழை, உரும்பராய், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் மக்கள் பெரும் பீதியடைந்தனர் என்று அவ்வப் பகுதி செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் படகுச் சேவை நேற்றுத் தடைப்பட்டது!

யாழ்ப்பாணம், டிச. 11

கிளாலி படகுச் சேவை நேற்று முற்றாகத் தடைப்பட்டது.

கிளாலிக் கரையில் பெரும் எண்ணிக்கையான பயணிகள் நேற்று கூடியிருந்த போதும், படகுச்சேவை நடத்தப்படவில்லை.

இதனால் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதற்கிடையில்—

கடந்த திங்களன்று யாழ். வாவிப் பகுதியில் நான்கு படகுகளை கடற்படையினர் நிர்மூலமாக்கியதாக கூட்டுப் படைகள் தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் எம். கே. எம். அமீம்மன நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வடக்கிலும், கிழக்கிலும் இறுதி அளவிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார். (ஓ-5)

## அங்கிலிக்கன் புதிய ஆயர் விரைவில் வடக்கே வருவார்

கொழும்பு, டிச. 11

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு புதிய ஆயர் அதி. வண. கெனத் மைக்கல் ஜேம்ஸ் பெர்னாண்டோ, 1993 ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கு பகுதிக்கு விஜயம் செய்ய உள்ளார்.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தி நாட்டில் அமைதியை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ளும் பொருட்டே அவர் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல் வைபவத்தின் போது பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் இறிஸ்தவ மதத்தின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மதகுருமார், பிற மதங்களின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குஜராத்தில் நிலைமை மோசம்:

## ஓடும் ரயிலில் 24 பயணிகள் கத்தியால் குத்திக் கொலை

புதுடில்லி, டிச. 11

அயோத்தி அசம்பாவிதங்களின் எதிரொலியாக ஏற்பட்ட இந்து - முஸ்லிம் கலவரங்கள் குஜராத்தில் நேற்று மோசமான கட்டத்தை அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

சூரத் நகருக்கு அருகே நேற்றுக் காலை ஓடும் ரயிலில் வைத்து 24 பயணிகள் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சடலங்கள் ஓடும் ரயிலிருந்து வெளியே வீசப்பட்டன.

நேற்று முன்தினம் இருபது அப்பாவிகள் உயிருடன் தடிக்கத் தீ மூட்டி எரிக்கப்பட்ட சூரத் நகருக்கு அருகே ரயில் பயணிகள் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றது.

குஜராத் மாநிலத்தில் மட்டும் கடந்த நான்கு நாள் கலவரத்தில் இருநூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். (உ-5-6)

## விஷ்வ ஹிந்து பரிஷத் உட்பட 5 அமைப்புகளுக்குத் தடை

புதுடில்லி, டிச. 11

அயோத்தி சம்பவங்களை அடுத்து மூன்று இந்து அமைப்புகளுக்கும் இரு இஸ்லாமிய அமைப்புகளுக்கும் இந்திய அரசு நேற்றுத் தடைவிதித்தது.

விஷ்வ ஹிந்து பரிஷத், ராஷ்டிரிய சுயம் சேவக்சங் (ஆர். எஸ். எஸ்.), பஜ்ராம் தள் ஆகியவையே 1967 ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட இந்து அமைப்புகளாகும்.

இஸ்லாமிய சேவா சங், ஜமாயத் இஸ்லாமி ஆகிய இரு அமைப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ள போதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களின் அடிப்படை தேவைகள்; பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னோடியாக பாடசாலைகள் மற்றும் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி, போசாக்கு, சுகாதாரக் கல்வி, வைத்திய வசதி, மலசலகூட வசதி, தொற்றுநோய்த் தடுப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் தொடர்பான விபரங்கள் கிராம உத்தியோகத்தர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.

முகாம்கள் உள்ள பிரிவுகளின் உதவி அரசாங்க அதிபர்களின் பணிப்பிற்கிணங்கவே இவ் விவரங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் குறைபாடுகள் நிலவும் முகாம்கள் இனங்காணப்பட்டு, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்படி தேவைகள் பூர்த்தி செய்து வைக்கப்படும் என்று அறிய வந்தது. [உ-175]

## விவசாய உபகரணங்கள் கப்பல் மூலம் தருவிப்பு

யாழ்ப்பாண விவசாயிகளுக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ள விவசாய உபகரணங்கள் "இம்ரினா" என்ற கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

"கெயர் இன்ரநஷனல்" "யு. என். எய்ட்" "ஸி. ஜி. ஈ. எஸ்." ஆகிய அமைப்புக்கள் வழங்கிய உர வகைகள், விதைகள், மண்வெட்டிகள் மற்றும் உபகரணங்கள் இக் கப்பலில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## அயோத்தி சம்பவங்கள்; ஐ.நா.பொதுச்செயலர் கவலை

வாஷிங்டன், டிச. 11

பாபர் மசூதி இடிக்கப்பட்டது குறித்தும் அதனை அடுத்து இந்தியாவிலும் பக்கத்து நாடுகளிலும் ஏற்பட்ட வன்முறை குறித்தும் ஐ. நா. பொதுச்செயலாளர் பூட்ரோஸ் பூட்ரஸ்காலி கவலை தெரிவித்துள்ளார்.

வழிபாட்டு இடங்களை அழிப்பதையும் உயிரிழப்புகளையும் டாக்டர் காலி நேற்று தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் கண்டனம் செய்தார்.

## இராணுவத்திடம் சிக்கியுள்ள மன்னார் மக்களுக்கு உணவு எடுத்துச் செல்வதற்குத் தடை

யாழ்ப்பாணம், டிச. 11

மன்னார் மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் சிக்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் உலர் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற "அதிவேக அதிரடி" இராணுவ நடவடிக்கையின் போது படையினரிடம் சிக்கிய 8 ஆயிரம் தமிழ் மக்களுக்கு இராணுவம் உணவு வழங்குவதில்லை என்றும் —

தொண்டர் நிறுவனங்கள் அவர்களுக்கு வழங்குவதற்கான உலர் உணவை எடுத்துச் செல்வதற்கும் இராணுவம் அனுமதி மறுத்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## பல இன மக்கள் வாழும் நாட்டிற்கு சமஷ்டி அரசமைப்பே சிறந்தது

### ஜனாதிபதி முன்னிலையில் சுவிஸ் பிரதிநிதி பேச்சு

கொழும்பு, டிச 11

சுவிட்சர்லாந்து போன்ற பல இன, பல கலாசார மக்கள் வாழும் நாடுகளில் சமஷ்டி அரசமைப்பு முறை சமாதான சகவாழ்வை வளர்க்கும்.

சுவிட்சர்லாந்து அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் பிரிட்ஸ் ஸ்ரேஹ்லின் (Fritz Stachlin) முன் கண்டவாறு கூறினார்.

பத்தரமுல்ல- பெலவத்தையில் சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவன அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் என்று நம்புவதாகவும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் பட்சத்தில் நாட்டின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

இலங்கையை விட அளவில் சிறியதானாலும் குறைந்த மக்கள் தொகை கொண்டதுமான சுவிட்சர்லாந்தில் சமஷ்டி அரசமைப்பு முறை தான் உண்டு என்றும் அவர் கூறினார்.

புதிய தலைமைக் காரியாலயத்தை ஜனாதிபதி பிரேமதாஸ திறந்து வைத்தார். பிரதமர் டி. பி. விஜேதுங்கா உட்பட அமைச்சர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (த-ஏ)

## உருளைக்கிழங்குச் செய்கை: ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11

உருளைக்கிழங்குச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், விவசாயிகளுக்கு இதற்கான உதவி ஒத்தாசைகளை வழங்க முன்வந்துள்ளது.

சண்டிலிப்பாய், உடுவில், நல்லூர் உதவி அரசு அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த — இதுவரை செய்கையை ஆரம்பிக்காத — விவசாயிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது. கழகத் தலைமைப் பணிமனையுடன் அல்லது உரும்பிராயில் உள்ள பணிமனையுடன் விவசாயிகள் தொடர்பு கொண்டு தமது தேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. [ஒ]

## தொலைக் கல்வி பயிற்சி நெறி: பயிலுநர் ஆசிரியர் பரீட்சை: விண்ணப்பங்கள் வந்துவிட்டன

யாழ்ப்பாணம், டிச. 11

நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் யாழ்ப்பாணத்திற்கு விமான மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்கள் தத்தமது பயிற்சி நிலையங்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு சமுகமளித்து தமக்குரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்யுமாறு யாழ். மாவட்ட தொலைக் கல்வி இணைப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு. துரை தியாகராசா அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் மத்திய தொலைக்கல்வி மத்திய நிலையங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் உடனடியாகச் சேகரிக்கப்பட்டு கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-11]

## அங்குரார்ப்பணம்

பாசையூர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. [த-30]

## மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 11

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் மயிலணி முரளி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் வகுப்புகள் நாளை சனிக்கிழமை மீண்டும் ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [த]

## 69 வருடங்கள் பூர்த்தியாகின்றன

யாழ்ப்பாணம், டிச. 11

சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இம்மாதம் 31 ஆம் திகதி 69 வருட சேவையைப் பூர்த்திசெய்து எழுபதாவது வருடத்தினை ஆரம்பிக்கிறது.

இதே வேளை இவ்வருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம், நவம்பர் மாதம் வரையான செயற்பாட்டு ஒப்பீட்டு அறிக்கை ஒன்றை சங்கப் பொது முகாமையாளர் திரு. வே. [illegible] வெளியிட்டுள்ளார். [த]


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை இன்பராஜ்**
(தங்கராசா ஜெயசீலன்)

வீர ஜனனம்: 17 — 01 — 1979
வீர மரணம்: 08 — 12 — 1991

திதி: 11 — 12 — 1992

(08 - 12 - 1992 அன்று வளலாயில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த)
வீரவேங்கை இன்பராஜ் (இன்பம்)

சரணவாய் ஊர் கண்டெடுத்த கண்மணி
சனப்புலிகள் வாழ்த்திடும் ஜெயமணி
இவலப்பில் ஈழம் கண்டிட புகுந்தமணி
ஈனர்களை கொன்றொழித்த புலிமணி;

உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,
- குடும்பத்தினர்.

சரணவாய் மேற்கு,
அத்திரான்.



### வவுனியா நகரசபை நவீன சந்தைக் கடைகளின் உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

நவீன சந்தையில் அழிக்கப்பட்ட அல்லது எரிந்துபோன கடைகள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. இவைகளின் உரிமையாளர்கள் தங்கள் உரிமையைக் கோருவதற்கு 30 - 12 - 1992 வரை கால அவகாசம் இத்தால் வழங்கப்படுகிறது.

குறித்த திகதிக்கு முன் உரிமை கோரத் தவறும் கடைகள் கேள்வி நடைமுறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென இத்தால் அறியத்தருகிறேன்.

இராஜா தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா, 27 - 11 - 1992 [இ-3975]



### 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**அக்னஸ் அரியமலர் மரியதாஸ்**

தோற்றம்: 1939-07-25
மறைவு: 1992-11-12

அன்பின் திருவுருவாய், பாசத்தின் இருப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த தெய்வமே! உம்மை என்றும் மறவாதிருப்போம்.

இவரின் ஆத்மா சாந்தி பெற யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நாளை (12-12-1992) சனிக்கிழமை காலை 7 - 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பா. மரியதாஸ் (கணவன்),
பிள்ளைகள்.

இல: 8, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (23552)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து வருகின்ற தமிழ் பாரசீகப் பத்திரிகைகளின் சொந்த பிரதிகள் கைவசம் உண்டு. ஏ. இ. எஸ். தொகுதி விநியோகங்கள், 90 கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [5447]

### விற்பனையாகின்றன

ஆவலோடு எதிர்பார்த்திருந்த சித்திரம் (அலங்காரங்களும், விளக்கப்படங்களும்) தொகுதி 1 விற்பனையாகின்றது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: மசோ. வெளியீடு: நடுவுத்திருத்தி. விநியோகம்: ஸ்ரீ சாந்தா புத்தகசாலை, 830, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [23556]

G A Q சுப்பிரமணியம், காவி வரைபடங்கள், பத்மாவதி சரித்திரம், தமிழ் இலக்கணம், B. A. நாச்சியார் திருமொழி. வெளிவிப்பாதரசம் ஆகிய வகுப்புகளுக்குரிய புத்தகங்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் [இ-3841]

O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உச்சப் புள்ளி பெற உதவும் மனைப்பொருளியல், சங்கீதம், சித்திரம் வினா-விடைகள் விற்பனையாகின்றன: எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [23585]

### அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலை மாணவர்களுக்கு மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள் விற்பனையாகின்றன; அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [இ-8970]

### விஞ்ஞான ஆசிரியர் தேவை

5, 6, 7 ஆண்டுகளுக்கு கற்பிக்கக்கூடிய அனுபவம் உள்ள விஞ்ஞான ஆசிரியர் தேவை. 15-12-92இற்கு முன் விண்ணப்பிக்கவும். விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி-2816)

### கவிதைத் தொகுதி

மனுக்கு சவால் விடவும், பூ உதிர்வுக்கு நியாயம் கற்பிக்கவும் முனைகின்ற வேலணையூர் சுரேஷின் "சாந்தி" கவிதைத் தொகுதி புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். [23537]

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது! அதி சிறந்த பெறுபேற்றை யாழ். மாவட்டத்தில் பெற்ற எமது நிறுவனத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பயிற்சிகளை (15 வினாத்தாள்கள்) எம்மிடமும், எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்; புதிய கல்வி நிலையம், 819, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23534]

### கணிதம்

ஆண்டு 9, 10, 11இல் முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய B Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [23593]

### விற்பனைப் பயிலுநர்

பிரபல புத்தகக் கடைக்கு விற்பனைப் பயிலுநர்கள் தேவை. நேரில் வரவும். 422, (616) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [இ/3972]

### SPOKEN ENGLISH

3 மாத துரிதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. Spoken English with English Grammar and English Literature கிழமையில் இரண்டு நாட்கள். V N Kandasamy, A. I. B. Part - I (London), Inter (London) 87, திருநெல்வேலி றோட், (பலாலிற்கு அண்மையில்) கொக்குவில். [23578]

### இலவச திருமண சேவை

29 வயது, ஆயிலியம், செவ்வாய் 7, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். திரு. விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி [23541]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L SAT., & SUN. CLASSES

(8-00 — 3 00)

ஆரம்பம்: 12 - 12 - 1992

நேர அட்டவணை:

| | | |
|---|---|---|
| 08 — 09 | விஞ்ஞானம் | திரு. J .R. சூரி |
| 09 — 10 | ஆங்கிலம் | திரு. விஸ்வநாதன் |
| 10 — 11 | கணிதம் | திரு. ஜெகன் |
| 11 — 12 | தமிழ் | திரு. சிவா |
| 12 — 01 | சமூகக்கல்வி | திரு. கோபி |
| 01 — 02 | சமயம் | திரு. கெங்கா |
| 02 — 03 | வர்த்தகம் | திரு. கருணாகரன் |

★ தூர இட மாணவர்களின் நன்மை கருதி இப்புதிய பிரிவு ஆரம்பிக்கப்படுகிறது.

## EVENING CLASSES

(3-00 — 6 00)

O/L (பிரிவு - 1, 2)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

வகுப்புக்கள் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளன. புதிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

[இ-2819]

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

O/L

ஆண்டு 10, 9 புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

விஞ்ஞானம் — தயாநிதி
கணிதம் — கதிர்
சமூகக்கல்வி — கியூலேட்
தமிழ் — பிரதீபன்
ஆங்கிலம் — கிரி
வர்த்தகம் — ஸ்ரீ

[இ-2805]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 02 — 1910

உதிர்வு: 23 — 11 — 1991

திருமதி

## சிவக்கொழுந்து சிதம்பரம்பிள்ளை

அன்பின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், கருணையின் உறைவிடமாய், இல்லத்தின் ஒளிவிளக்காய் சோபித்த

உங்கள் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மருமகள், பேரப்பிள்ளைகள்.

உசன் தெற்கு, மிருசுவில். [5011]

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை

# ஏல விற்பனை

## பாவித்த ரயர்கள்

600 x 14, 700 x 14, 700 x 16, 750 x 16 ஆகிய அளவுகளிலான பாவித்த ஒரு தொகுதி ரயர்கள் 16 - 12 - 1992 புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு வைத்தியசாலை வளவினுள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்; ஒவ்வொரு ரயரும் தனித்தனியாக ஏலத்தில் விடப்படும். ஆகக்கூடிய கேள்வியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி அன்றைய தினமே ரயர்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

ஏலதினத்திற்கு முதல்நாள் (15 - 12 - 1992) அலுவலக நேரத்தில் ரயர்களைப் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி,
செல்வி ந. கனகரத்தினம்,
பணிப்பாளர்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 1992 - 12 - 08

[சி-2822]

கோண்டாவில், யாழ்ப்பாணம் (பி. எம். சி) நெல்லியடி.

அத்தியாவசிய சேவைகள் களஞ்சியங்களில் பொருள்களை லொறிகளில் இருந்து இறக்கி, நிறுத்து, அடுக்கி / நிறுத்து லொறிகளில் ஏற்றுவதற்கான

# கூறுவிலை கோரல்

கோண்டாவில், யாழ்ப்பாணம், நெல்லியடி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் களஞ்சியங்களில் 01-01-1993 முதல் 31-12-1993 வரையிலான காலத்திற்கு லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் அரிசி, மா, சீனி போன்ற உலர் உணவுப் பொருள்களை இறக்கி, நிறுத்து, அடுக்கி/ நிறுத்து ஏற்றுவதற்கு பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் சங்கங்கள்/ ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும் இதே போன்ற சங்கங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

கூறுவிலைகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் தயாரிக்கப்பட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு, கடிதத்தின் இடப்பக்க மேல் மூலையில் "பொருள்களை இறக்கி, ஏற்றுவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிடப்பட்டு 18-12-1992ஆம் திகதிக்கு முன்னர் எனது அலுவலகத்தில் கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## மாதிரி கூறுவிலை கோரல் பட்டியல்

1. கூறுவிலை கோரும் சங்கத்தின் பெயர்: ..........................................

2. நிரந்தர முகவரி: ..........................................

| 3. சேவைகள் | மெ. தொன் ஒன்றுக்கு ரூபா. சதம் |
|---|---|
| 1. லொறி அடுக்கிலிருந்து இறக்கிக் கொண்டு சென்று நிறுத்து களஞ்சியத்தினுள் அடுக்கல், (தேவையானவிடத்து கழன்றிருக்கும் மூடைகளைத் தைக்க வேண்டியும் வரலாம்.) | |
| 2. களஞ்சிய அடுக்கிலிருந்து கொண்டு சென்று நிறுத்து லொறியினுள் ஏற்றி, அடுக்கல், (தேவையானவிடத்து கழன்றிருப்பின் மூடைகளை தைக்க வேண்டியும் வரலாம்.) | |
| 4. களஞ்சியத்தினுள்ள மேற்குறிப்பிடப்படாத சாதாரண களஞ்சியத் தொழிலாளர் வேலை (ஆண் தொழிலாளி நாளொன்றுக்கு) ..............ரூபா (பெண் தொழிலாளி நாளொன்றுக்கு) ..............ரூபா | |

..........................................

கையொப்பம், றப்பர் முத்திரை.

திகதி: ..........................

செ. பத்மநாதன்,
திட்டப்பணிப்பாளர்,
யாழ். அரசாங்க அதிபருக்காக.

[இ-3942]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## புதிய சமன்பாடு வடிவம் பெறும்!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முயன்றால் யுத்தத்துக்கு முடிவு வராது;

இவ்வாறு அரசாங்க சார்புப் பத்திரிகையான 'ஒப்சேர்வர்' ஞாயிறு இதழில், அதன் பத்தி எழுத்தாளர் அரசாங்கத்துக்குப் புத்திமதி கூறியிருக்கிறார். இந்தப் பத்தி எழுத்தாளர் ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசியல் ஆலோசகர்களில் ஒருவருமாவர்.

இந்தப் புத்திமதியைப் பத்திரிகையில் எழுதுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட ஆலோசகர் ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தாரா இல்லையா என்பது தெரியாது. அவ்வாறு தெரிந்திருப்பின் ஜனாதிபதி இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதும் தெரியவில்லை.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களுக்கு இப்படி ஓர் ஆலோசனை தேவைப்படும் காலம் இது.

வடக்கில் யுத்தம் பிரகடனப் படுத்தப்படவில்லை. தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தான் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் 'பச்சைப்' பொய் கூறினார்.

அந்தப் பொய் கூறப்பட்ட ஒரு வார காலத்திற்குள் மூத்த அமைச்சரான திரு. வின்சென்ட் பெரேரா இன்னொரு அர்த்தமற்ற பொய்யை நாடாளுமன்றத்திலேயே அவிழ்த்து விட்டிருக்கிறார்; தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தம் ஒன்று நடத்தப்படவில்லை. அவர்களை அடக்குவதற்கே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன — என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு-கிழக்கில் நடக்கும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல; விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே; அவர்களை ஒழித்துக் கட்டுவதே போரின் நோக்கம். அவர்களை இராணுவ ரீதியில் ஒடுக்கிய பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வு-பேச்சுவார்த்தை என்று அரசாங்க அமைச்சர்களும், படை அதிகாரிகளும் "கெச்சிதமாகப்" பேசி வந்தமையை சிங்கள மக்கள் மறந்திருக்கலாம், தமிழர்கள் மறக்கமாட்டார்கள்.

"ஒப்சேர்வர்" பத்தி எழுத்தாளர் போன்ற அரசியல் ஆலோசகர்கள் இப்போது கூறும் புத்திமதியை அப்போது அரசாங்கத்தினருக்குக் கூறி, அவர்கள் அதற்குச் செவிமடுத்திருந்தால், தமிழர், சிங்களவர் தரப்புகளில் பல உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவும், அனுதாபமும் இருக்கும் வரை அவர்களைத் தோற்கடிப்பது என்பது கஷ்டமான காரியமாகும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுக்கான திட்டம் ஒன்றை நாம் முன்வைக்காத இடத்து இராணுவ ரீதியிலான முயற்சிகள் எதுவும் பலனளிக்காது— என்றும் பத்தி எழுத்தாளர் புத்தி கூறியிருக்கிறார்.

தமிழர்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறு. அவர்களுக்கு மக்களின் ஆதரவு இல்லை என்று முன்னர் கூறியவர்கள் இப்போது உண்மை தெரிந்து எழுதுவது சற்று திருப்தி தருவதாகும். வாரத்துக்கு வாரம், நாளுக்கு நாள் முரணாகப் பேசும் அரசாங்க அமைச்சர்கள் இதனையாவது, இப்போதாவது காதில் போடுவார்களா?

தமது தரப்பில் ஓர் அரசியல் தீர்வை முன் வைக்காமல் காலங்கடத்த நினைத்திருக்கும் அரச தரப்பினருக்கு காலத்திற்கேற்ற புத்திமதி இது. இதுவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தால் இலங்கைக்கும் விரைவில் முடிவு வரும். அது ஸ்ரீலங்கா + தமிழீழம் = முந்திய இலங்கை; என்ற புதிய சமன்பாட்டுக்கு வடிவம் கொடுத்தாகிவிடும்.

# மரங்களின் பயங்கர எதிரி குருவிச்சை
# வனவளம் பேண அதை ஒழிப்போம்

ஒட்டுண்ணி வகைகளில் எமது வனவளத்தை மோசமாகவும், வேகமாகவும் பாதிப்பது 'குருவிச்சை' என்ற ஒட்டுண்ணித் தாவரமாகும். மனிதன் தவிர்ந்த, ஏனைய மேய்ச்சல் விலங்குகளில் இருந்தும், பூச்சிகளில் இருந்தும் தம்மை தாமே காப்பாற்றிக் கொள்ள சில விசேட தன்மைகளை கொண்டுள்ள தாவரங்கள் கூட மனிதனிடமிருந்தும் இந்த ஒட்டுண்ணித் தாவரத்திடமிருந்தும் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள முடியாது பரிதாபமாக அழிந்து வருகின்றன;

'லொறந்தஸ்' என்னும் தாவரவியல் பெயரினைக் கொண்ட இக் குருவிச்சையானது வனம் என்ற சமுதாயத்தில் ஒரு முதலாளித்துவ கொள்கையுடைய தாவரமாகும். மற்றவரது உழைப்பை உறிஞ்சும் கொடிய தன்மையினால் தானும் வாழ்ந்து தனது சந்ததியையும் பெருக்கிக் கொண்டு வருவது இந்தக் குருவிச்சையின் தனிச் சிறப்பாகும்; இதன் உயிர் வாழ்க்கை தந்திரம் நிறைந்ததாகும்;

### குருவிச்சையின் இயல்பு

பூக்கும் தாவரமான இந்த குருவிச்சையில் பல இனங்கள் உண்டு. நீளமான குழாய் போன்ற அமைப்பையுடைய இதன் பூக்கள் சிவப்பு அல்லது பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும்; சதைப் பற்றுள்ளவையாகவும், இனிப்புச் சுவையைக் கொண்டுள்ளதாகவும் இருக்கும். இதனது பழங்கள், ஒருவித பசைத் தன்மையோடு, ஒரே ஒரு விதையினை மாத்திரமே கொண்டிருக்கும். இக்கனிகளின் இனிப்புத் தன்மை, மற்றும் அதனது மணம் என்பவற்றால் கவரப்பட்டு வரும் பறவைகள் இவற்றை உண்ணும் போது அவற்றினது அலகுகளில் குருவிச்சையின் விதை ஒட்டிக் கொள்ளும். ஒட்டிக் கொண்ட விதைகளோடு பறக்கும் பறவைகள் பிறிதொரு மரத்தில் இருந்து கொண்டு தமது அலகுகளை தேய்த்து, விதைகளை கழற்றுகையில் அவ்விதை அம்மரத்தில் ஒட்டிக் கொள்கின்றது. பறவைகள் சுதந்திரம் பெற்று பறக்கின்றன; மரம் தனக்குத் தெரியாமலே தனது சுதந்திரத்தை இழக்கத் தொடங்குகின்றது.

மரங்களில் ஒட்டிக்கொண்ட குருவிச்சை விதையானது, முளைவிடத் தொடங்குவ-

### மழை காலமே வெட்டி எறிய உகந்த வேளை

தோடு முதலில் மெல்ல மெல்ல தனது ஆக்கிரமிப்புக் கரத்தினை (வேரினை) அம் மரக்கிளையைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டு, பின்னர் படிப்படியாக அக்கிளையினுள் தனது வேரினை உட் செலுத்திக் கொள்கிறது; உட் செலுத்தப்பட்ட அந்த வேரானது நேராக மரங்களுக்கான கனியுப்புக்களையும், நீரையும் மண்ணில் இருந்து கடத்துகின்ற "கடத் பகுதி" என அழைக்கப்படும் மையப் பகுதிக்குள் நுழைந்து கொண்டதும் சுரண்டல் வேலையைத் தீவிரப்படுத்துகின்றது. "கொலிடோரியா" என்ற அழைக்கப்படும் குருவிச்சையின் இவ்வேரானது குருவிச்சை வளர்வதற்குத் தேவையான— போதிய — கனியுப்புக்களையும், நீரையும் குறிப்பிட்ட மரத்தில் இருந்தே பறித்து உறிஞ்சுகின்றது. இதன் விளைவாக பறவை வந்து இருப்பதற்கு இடம் கொடுத்த மரமானது பறவையோடு ஒட்டி வந்த அழையா விருந்தாளியான குருவிச்சை வளர்வதற்கும் சேர்த்து நீரையும், கனியுப்பையும் தேட வேண்டிய கட்டாயத்துக்கு உட்படுகிறது. நாட்செல்லச் செல்ல குருவிச்சையும் வேகமாக வளர்ந்து அக்கிளை முழுவதிலுமே படர்ந்து கொள்கிறது. தான் இவ்வாறு படர்ந்து பெரிது படுவதற்கு ஏற்ப மரத்தில் இருந்து கனியுப்பையும், நீரையும் உறிஞ்சி எடுக்கும் அளவையும் அதிகரிக்கின்றது.

இதற்கு வசதியாகத்தான் ஏற்கனவே மரத்தின் (கடத் பகுதியினுள் நுழைந்துக் கொண்ட தனது கரத்தினை [கொலிடோரியா என்றழைக்கப்படும் வேரினை] நன்றாக பலப்படுத்திக் கொள்கிறது; இதன் காரணமாக மரத்தின் குறிப்பிட்ட அப்பகுதி வெளிப் பக்கமாக பெருத்து வீங்கி ஒரு "கழலை" போல் நிரந்தரம் பெற்று விடுகிறது. தெரியாத்தனமாக வந்த ஒட்டுண்ணியான குருவிச்சைக்கு தங்க இடம் கொடுத்து அது வளரத் தேவையான கனியுப்புக்களையும் நீரையும் கொடுக்கும் "விருந்து வழங்கி"யான குறிப்பிட்ட அம்மரம் புற்றுநோய் போன்ற ஒரு வகை நோய்க்கு உள்ளாகின்றது.

### வாழ்க்கைப் போராட்டம்

பீடிக்கப்பட்ட நோய் ஒரு புறம், தன்னைவிட வேகமாக வளர்கின்ற குருவிச்சைக்கும், தனக்கும் தேவையான கனியுப்பு நீர் போன்றவற்றை திரட்ட வேண்டிய வேலைப் பளு ஒரு புறமுமாக, குறிப்பிட்ட அம்மரம் உயிர்வாழ மிகுந்த போராட்டத்தை நடத்த வேண்டி ஏற்படுகிறது; இது காரணமாக அது தனது கிளைகள் ஒவ்வொன்றையும் இழக்கத் தொடங்குகின்றது; ஆம், முதலில் குருவிச்சை பிடித்த மரக்கிளை பட்டுப் போக, படிப்படியாக அம்மரத்தின் ஒவ்வொரு கிளையுமே பட ஆரம்பிக்கின்றது; அதனை ஆக்கிரமித்துக் கொண்ட குருவிச்சையினால் அம்மரம் தனது பகுதிகளை ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்குகின்றது. இயலாது போகும் நிலையான இறுதிக் கட்டத்தில் மரம் முற்றாகவே பட்டுப்போகின்றது. மனித சமுதாயம் வாழ சுத்தக் காற்றினை நித்தமும் வழங்கி வந்த மரம் ஒரு ஒட்டுண்ணிக் குருவிச்சைக்கு இடம் கொடுத்ததால் எதிர்த்துப் போராட முடியாமல் இறந்து போகின்றது. இதுவரை காலமும் மரத்தினது உழைப்பினை உறிஞ்சி, தன்னை வளர்த்து தனது வாரிசுகளையும் பரப்பி வந்த குருவிச்சையும், மரம் இறந்ததால் தொடர்ந்து தான் உயிர் வாழ்வதற்கு தேவையான கனியுப்புக்களையும், நீரையும் பெற வசதி இல்லாமல் முடிவில் தானும் இறந்து போகின்றது.

### எமது கடமை

சூழலைப் பாதுகாப்பதன் மூலம் மனிதராகிய நாம் வாழப் பெருதவி புரிந்துவரும் மரங்களை ஒட்டுண்ணிக் குருவிச்சைகளால் இறப்புக்களில் இருந்து பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையுமாகும். மரங்களை குருவிச்சையின் பிடியிலிருந்து பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் இன்றே நடவடிக்கையில் இறங்குவோம். இது மழைக் காலம், எமது மா, பாதுளை, தோடை, எலுமிச்சை உள்ளிட்ட பயன்தரு மரங்களிலும், மற்றும் வன மரங்களிலும் ஆக்கிரமித்துள்ள கொலைகாரியான குருவிச்சையை அது காலூன்றிய கிளையோடு வெட்டி எறிய இதுவே உகந்த காலம். குருவிச்சை பிடித்து கழலை தோன்றிய இடத்தில் இருந்து ஏறக்குறைய ஒரு அடி தள்ளி குறிப்பிட்ட அக்கிளையை இழுத்து விடாமல் வாள் கொண்டு அல்லது கூரான கத்தி கொண்டு உடனடியாக வெட்டி எறிவோம். உடனடியாக நாம் செய்யும் இச் செயற்பாட்டின் மூலம் நாம் மரங்களை மட்டுமல்ல, எங்களையும் எங்கள் சந்ததியையும் காத்தவர்களாகின்றோம்;

(நன்றி: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்) ★

## அத்வானி, ஜோஷி நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

### தொடர்ந்தும் விளக்கமறியல்

புதுடில்லி, டிச. 11

காவலில் வைக்கப்பட்டுள்ள பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல். கே. அத்வானி, டாக்டர் முரளி மனோகர் ஜோஷி, விஷ்வ இந்து பரிஷத் தலைவர் விஷ்ணு ஹரிதால் மியா மற்றும் செல்வி உமாபதி ஆகியோரே நேற்று அக்பர்பூர் நகரிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இனக்குரோத உணர்வைத் தூண்டி நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தியதாக இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளன.

பூர்வாங்க விசாரணையின் பின்னர் நீதிவான் நால்வரையும் மேலும் ஒரு வார காலம் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மேற்படி தலைவர்கள் நால்வரும் அயோத்தியில் இருந்து 65 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் அக்பர்பூரில் உள்ள சிறிய விமானத் தளத்துக்குக் கொண்டுவரப்பட்டனர் என்றும்—

அப்போது இந்துக்கள் பெரும் எண்ணிக்கையில் விமான நிலையத்தில் கூடியிருந்து, கைது செய்யப்பட்ட தலைவர்களை உடனடியாக விடுவிக்கும்படி கோஷமிட்டனர் என்றும்—

அவர்களால் விமானத்தளமும் தாக்கப்பட்டது என்றும் செய்திகள் தெரிவித்தன.

(ஒ-எ)

## இந்தியத் தூதரகம் மீது தெஹ்ரானில் தாக்குதல்

தெஹ்ரான், டிச. 11

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்தை 300க்கு அதிகமான இந்திய முஸ்லிம்கள் தாக்கினர் என்று அறிவிக்கப்படுகிறது;

ஈரானிய செய்தி ஸ்தாபனம் இதனை அறிவித்தது;

இதனிடையில் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள இந்து ஆலயங்கள் மற்றும் இந்தியத் தூதரகம் ஆகியவை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும் என்று மிரட்டல்கள் வெளியாகியதை அடுத்து அந்த இடங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்படுகிறது.

(ஒ-எ)

## கலவரம் தணியும் நிலை!

இந்தியாவில் குஜராத் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் இந்து - முஸ்லிம் கலவரம் தணியும் நிலையை எட்டியிருப்பதாகவும் —

பொதுவாக நாட்டின் பல பகுதிகளிலும் முன்னேற்றமான நிலைமை காணப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

போபால் நகரில் மூன்று நாள்கள் இடம்பெற்ற உக்கிர கலவரங்களின் பின்னர் நேற்று அமைதி நிலவியது.

கலவரங்களினால் கர்நாடகத்தில் 53 பேரும், ஆந்திராவில் 24 பேரும், கேரளத்தில் 12 பேரும் உயிரிழந்துள்ளனர். இம்மாநிலங்களில் மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது;

(உ-5-6)

## இதுவரை 880 பேர் கலவரங்களில் பலி!

லண்டன், டிச. 11

இந்தியாவில் கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்ற இந்து — முஸ்லிம் கலவரங்களில் இதுவரை 880 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கல்கத்தா நகரில் நேற்று இடம்பெற்ற வன்முறைகளில் 10 பேர் வரை உயிரிழந்ததை அடுத்து கலகக்காரர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி நேற்று வங்க மாநில அரச பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்தது; அங்கு தீவைப்பு, வன்முறைச் சம்பவங்களை அடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; இராணுவமும் பாதுகாப்புப் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறது;

(உ-5-6)

## மசூதியை மீளமைப்பது பற்றி அரசின் கருத்து என்ன?

### உயர் நீதிமன்றம் கேள்வி

★ அயோத்தியில் நிர்மூலமாக்கப்பட்ட பாபர் மசூதியை மீளக் கட்டுவது குறித்து அரசின் கருத்து என்ன?

★ பாபர் மசூதி இடிக்கப்படுவதற்குக் காரணமானவர்கள் மீதும், அவ்விடயத்தில் தமது கடமையைத் தவறவிட்ட பொறுப்பாளர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசின் கருத்து என்ன?

— இக்கேள்விகளை இந்திய மத்திய அரசிடமும் உத்தரப் பிரதேச மாநில அரசிடமும் புதுடில்லி உயர் நீதிமன்றம் விடுத்திருக்கிறது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனு தொடர்பாக எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் இக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது;

(உ-5)

## அமைதியான ஹர்த்தால்

சென்னை, டிச. 11

அயோத்தி அசம்பாவிதங்களைக் கண்டித்து, பாரதிய ஜனதாக் கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த 12 மணி நேர ஹர்த்தால் தமிழ் நாட்டில் நேற்று அமைதியாக நடைபெற்று முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியின் கொடும்பாவிகள் ஆங்காங்கே எரிக்கப்பட்டன.

(உ-எ)

## விஷ்வ ஹிந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும்—

அவை அயோத்தி பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

இந்து அமைப்புகளுக்கு மட்டும் தடைவிதிக்கப்படவில்லை என்று காட்டுவதற்காக இஸ்லாமிய அமைப்புகளையும் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் அரசு சேர்த்ததாகக் கூறப்படுகிறது.

(உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பதற்றத்துடன் பரீட்சை எழுதினர்!

தென்மராட்சிப் பகுதியில் அனேக பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. பரீட்சையை மாணவர்கள் பதற்றத்துடனேயே எழுதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சையின் மூன்றாவது நாளான நேற்று கணித பாடம் ஆரம்பமாகவிருந்த வேளையில், சுப்பசொனிக் விமானங்கள் சுற்றியதால் மாணவர்கள் பதற்றமடைந்தனர்.

விமானங்கள் தாக்குதல் நடத்திய போது மாணவர்கள் பலர் பரீட்சை நிலையங்களில் கூடியிருந்தனர் என்றும் —

மற்றும் பலர் பரீட்சை நிலையங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதற்றத்தின் மத்தியிலும் பின்னர் பரீட்சை நடந்ததாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். (ஒ-5)

# காயமடைந்தவர்கள்

நுணாவில், மட்டுவில் தெற்குப் பகுதிகளில் நேற்று சுப்பசொனிக் நடத்திய மோட்டார் மற்றும் ரொக்கட் தாக்குதல்களில் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அவர்களில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்போர் வருமாறு.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அருளானந்தம் அருணா (4 வயது), கிருஷ்ணன் ஜீவசரன் (19 வயது), இராசா ஜிதா (18 வயது), பாலசிங்கம் சுபேந்திரன் (22 வயது) தர்மரத்தினம் நிஷாந்தன் (7 வயது) —

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்தவரான பூபாலச்சந்திரன் சந்திரமலர் (53 வயது), மாதகலில் இருந்து இடம்பெயர்ந்தவரான வயிரநாதன் சிவசெல்வி (12 வயது)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்போர் வருமாறு:-

சி. சந்திரகுமார் (12 வயது), ரவிக்குமார் (8 வயது) சசி (4 வயது), சகோதரர்களான சுஜிகரன் (வயது 4), சஜிகரன் (8 வயது) மற்றும் தயாசாலஸ் (5 வயது), இறந்த பெண்ணின் மகனான ரஜீவன் (8 வயது) —

கே. சின்னம்மா (45 வயது), அப்புச்சி (16 வயது) நந்தினி (22 வயது) சின்னத்தம்பி (30 வயது), நடராசா வசந்தாதேவி (40 வயது).

(ஒ-15 117)

## விபத்தில் சிக்கிய வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 11

நாவடிச் சந்தியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற லொறி விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சரவணையில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவில் பகுதியில் வசித்து வந்த வல்லிபுரம் நல்லைதம்பி (வயது 73) என்ற வயோதிபரே மரணமானவராவார். (ஒ 15)

## சுப்பசொனிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நுணாவில் சந்திக்குச் சமீபமாக இடம்பெற்ற தாக்குதலில் அதேபகுதியைச் சேர்ந்த பரமநாதன் சாந்தகுமாரி (30 வயது), மற்றும் தந்தையார் முருகேசு (70 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

நேற்றைய தாக்குதலில் ஐந்து வீடுகளும் சேதமடைந்தன.

நுணாவில் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி சுப்பசொனிக் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியானார்கள் என்பது தெரிந்ததே.

(ஒ-117-31-15)

## குடாநாடு மீது ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதல்கள் இன்னும் தொடர்கின்றன. வான் குண்டு வீச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"கடந்த நான்கு மாதங்களாக யாழ். குடாநாட்டின் மீது இராணுவம் பல்வேறு தாக்குதல்களை எவற்றையும் நிறுத்தவில்லை என்பது உண்மை. அனால் பல தாக்குதல்கள் மேலும் நடத்தும் திட்டங்கள் பல தயாராகி வருகின்றன —இவ்வாறு மேலும் அவர் சொன்னார். (உ-5)

## அங்கிலிக்கன் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குருமார்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வடக்கு-கிழக்கில் இருந்தும் பல மதகுருமார் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு, கேரளம், பாகிஸ்தான் ஆகிய இடங்களின் ஆயர்களும் திருநிலைப்படுத்தும் வைபவத்துக்கு வந்திருந்தனர். வைபவ நிகழ்ச்சிகள் நான்கு மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்றன.

கன்ரபரி அதிமேற்றிராணியார் அதி. வந். கலாநிதி ஜோர்ஜ் லியோனார் கேரி புதிய ஆயரை திருநிலைப்படுத்தி வைத்தார். இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்து அமைதியைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை அதிமேற்றிராணியார் அவர்கள் அங்கு சமூகமளித்திருந்த ஜனாதிபதி பிரேமதாசவிடம் தமது பேச்சின் மூலம் நேரடியாக வலியுறுத்தி இருந்ததும் தெரிந்ததே (அ)

## ஈழ அகதிகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பும் விவகாரம் தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக பேராசிரியர் மாரசிங்கவை கனேடிய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவர் அண்மையில் கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள அரச அதிகாரிகள் உட்படப் பலரை சந்தித்துக் கலந்துரையாடினார். அங்குள்ள அகதி முகாம்களுக்கும் அவர் நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னர் அவர் கருத்து வெளியிடுகையில் —

"வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்குத் இன்னும் தீர்வு காணப்படவில்லை. எனவே கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை திரும்பி அனுப்புவது என்ற கனடா அரசின் யோசனையை இப்போதைக்கு செயற்படுத்த முடியாது — எனத் தெரிவித்தார்.

நிலைமைகளை நேரில் நன்கு [illegible] கூறியுள்ளார். (உ-5)

## கிளாலிக் கடலில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச 11

ஆனையிறவு முகாமிலிருந்து கிளாலி கடல் பக்கமாக நேற்று முன்தினம் இரவு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அப்பகுதியில் பொருள்களை ஏற்றிக்கொண்டு படகுகள் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. (ஒ-15)

## பற்றரி வெடித்து காயம்

யாழ்ப்பாணம், டிச. 11

நுணம்பிற்கு புகைபோட்ட சட்டிக்குள் "பென் ரோச்" பற்றரியைப் போட்டவர் அது வெடித்துச் சிதறியதில் கண்ணில் காயமடைந்தார்.

நல்லூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த குலசிங்கம் தினேஷ்வரன் (வயது 17) என்பவரே காயமடைந்தவராவார். (ஒ-15)

## மனித உரிமைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகன்மார், பிள்ளைகளை இழந்த பெண்கள் கட்டத்தில் கலந்துகொண்டதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்து திரண்டு வந்திருந்தனர்.

அன்னையர்களில் ஒருபகுதியினர் கட்ட மைதானத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளை, கொம்பனித்தெருச் சந்தியில் (ரவுண்ட் எபவுட்டில்) வைத்துப் பொலிஸார் தடுக்க முயன்றனர். ஆனால் அன்னையர்கள் அதற்குப் பணியாது தொடர்ந்து செல்ல எத்தனித்தனர். அவ்வேளை பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

பின்னர் அவர்கள் கூட்டம் ஆரம்பமாகி அமைதியாக நடந்து கொண்டிருந்த மேடை பூங்காவிற்கு விரைந்த அவரும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களைக் கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டனர். ஆனால் கூட்டத்தினர் பணியவில்லை. அதனைத் தொடர்ந்து கலகம் அடக்கும் பொலிஸார் மக்கள் கூட்டத்தினர் மீது தடி அடியும் நடத்தினர். ஒரு சில பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டனர்.

கூட்டத்தைக் குழப்ப வேண்டாம் என்று திரு. வாசுதேவ நாணயக்காரவும், மகிந்த ராஜபக்ஷவும் கேட்டபோதும் பொலிஸார் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் அவர்களைக் கைது செய்தனர்.

நேற்றைய தாக்குதல் சம்பவத்தில் "சண்டே ரைம்ஸ்" படப்பிடிப்பாளர் ஒருவர் உட்பட ஆறுபேர் படுகாயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் மட்டுமன்றி பத்திரிகைச் செய்தியாளர்களும் பொலிஸாரினால் தாக்கப்பட்டனர்.

கூட்டம் குழம்பிய பின்னர் வாசுதேவாவும், ராஜபக்ஷவும் விடுவிக்கப்பட்டனர். (அ-6)

## தெரிவுக்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவோ அல்லது மூன்றாவது நபர் ஒருவர் மூலமோ புலிகள் அமைப்புடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அப்படித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது தவறு என்றும் அவர் சொன்னார்.

புலிகளின் திட்டங்கள், பிரேரணைகள், யோசனைகள் எவையாக இருந்தாலும் அவற்றை அவர்கள் தெரிவுக்குழுவிடமே சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (உ-எ-5-6)

# மரண அறிவித்தல்கள்

## தம்பர் சபாபதி துரையப்பா

(இளைப்பாறிய C. C. S.)

ஆனைக்குலாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட T. S. துரையப்பா 10-12-92 அன்று காலமானார்.

அன்னார் பாலாம்பிகையின் கணவரும், இராசம்மா சோமசுந்தரத்தின் சகோதரனும், அம்பிகை, மீனா, ஸ்ரீ (கணக்காளர்), கமலம், ஆனந்தன், நிர்த்தி (சட்டத்தரணி), பத்மா, ரவி, கேதி ஆகியோரின் தகப்பனாரும், வைத்திய கலாநிதி இந்திரராஜா, அனுஷா, எட்வட், பாலேஸ்வரி, திருமுருகன் ஆகியோரின் மாமனாரும், றோஹினி, வேணி, வைத்திய கலாநிதி உமையாள், றொபேஷ், ஷீடல், துஷ்யந்தன், அரவிந்தன், தர்ஷன், சுரேஷ், அச்சுதன், அபிராமி, அஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் இன்று (11-12-92) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்கவும்.

தகவல்:
வைத்திய கலாநிதி இந்திரராஜா (மருமகன்)
"சேதிவரம்"
ஆனைக்கோட்டை.
(23595)

## வெ. நேசம்மா

நேசம்மா (அம்மணி) காலமானார். இவர் வெலிச்சோர் அவர்களின் அன்பு மனைவியும், யோசேப்பு (லிகிதர், புனித பத்திரிசியார் கல்லூரி), லீமா, மலக்கியாஸ் எமிலியானுஸ், யாமா ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்றோணி முடியப்பு ஜசிந்தா, ஜெயவதி, தெய்வேந்திரம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற இற பியேல், காலஞ்சென்ற ஆரோக்கியம் (மாட்டின் ஓய்வுபெற்ற மரவேலை ஆசிரியர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (11-12-92) இன்று, பிற்பகல் 4.00 மணிக்கு இவரது இல்லத்திலிருந்து, நல்லடக்கத்துக்காக யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெ. யோசேப்பு (மகன்)
15 ஈச்சமோட்டை கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(23601)

## சிற்றம்பலம் மாணிக்கவாசகர்

வடலியடைப்பைச் சேர்ந்த சிற்றம்பலம் மாணிக்கவாசகர் காலமானார். இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளரும், தற்போதைய வடலியடைப்பு புற்றானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபைத் தலைவரும் ஆவார்.

அன்னார் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், மஞ்சுளாதேவி (பிரான்ஸ்), இலங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கருணாகரன் (சுவிஸ்), சிவமணிதேவி (நோர்வே), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேசன் கிருஷ்ணகுமார், பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருமதி ஆ. அன்னலட்சுமியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11-12-92) வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிர்மலாதேவி (மனைவி)
அரசடி வேல்,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு
(23599)


ஆண்டு - 5

புலமைப் பரிசில் வகுப்பு

ஆரம்பம்: 12 - 12 - 1992
பிற்பகல் 4 மணி

ஆரம்ப பிரிவு
(PRIMARY SECTION)

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(சி-2812)



25 வருட சேவை!

'நியூ தாசன் சலூன்' சிகை அலங்கரிப்பு கலைத்துறையில்
இன்றுடன்
தனது 25 ஆவது வருட சேவையைப்
பூர்த்தி செய்கின்றது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஆண்கள், பெண்கள் — இருபாலருக்குமான நவீன சிகை அலங்காரிப்பு கலைத்துறைக்கான விசேட பயிற்சியை மலேஷியா தலைநகர் கோலாலம்பூரில் உள்ள "யூனிசக்ஸ்" சிகை அலங்கரிப்பு பயிற்சிக் கல்லூரியில் 10 மாதங்கள் அதி விசேட பயிற்சி பெற்று எமது நிலையத்தின் மூலம் உங்கள் முன் நாங்கள் சேவை ஆற்றுகிறோம் என்பதனை எல்லோருக்கும் அறியத் தருகின்றோம்.

எமக்கு வேறு கிளைகள் கிடையாது.

நியூ தாசன்
சலூன்

பலாலி றோட்,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

—உங்கள் ஆதரவுக்கு நன்றி—
(23597)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org